www.tamilarangam.net

# பாரிசில் அமிர்தலிங்கத்திற்கு விழா

# கயவர்கள் போட்ட நாடகம்!

அவசரஅவசரமாக அமிர்தலிங்கத்திற்கு பாரிசில் விழா எடுக்கப்பட்டுள்ளது. மொட்டைக்கடிதம் போன்று தாயரிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் - மங்கையற்கரசியை மட்டும் முன்னிலைப்படுத்தி கூட்டணி தொடர்பான மயக்கத்தைப் பாவிக்கும் உத்தி - என அமோகமாகத்திட்டமிட்டு இவ்விழா எடுக்கப்பட்டுள்ளது.

**ஏன் இந்த திடீர் விழா?**
**யார் இந்த விழா ஏற்பாட்டாளர்கள்?.**

இதனை பிரான்ஸ் தமிழர்கள் அறிந்திருக்க வேண்டும்.
இல்லையெனில் புகலிடத்தமிழர்களுக்கு விரிக்கப்படும் வஞ்சகவலையில் கால்கள் இடறுப்படும் அபாயம் ஏற்படலாம்.
தாயகத்திலும், புகலிடத்திலும் புலிகளின் தேசிய தலைமைப் பாத்திரத்தை கேள்விக்குள்ளாக்க முயலும் திட்டத்தின் தொடர்ச்சியே இது.
ஐரோப்பிய தமிழர்களின் ஒன்றுபட்ட பலத்தில் குத்திப்பார்க்கும் முயற்சியாக இது நடாத்தப்பட்டுள்ளது.
லண்டனில் குப்பை கொட்டும் குழுவினை இங்கு அழைத்து வந்து குத்திப்பார்க்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. லண்டனில் புலி எதிர்ப்பை தனது குலத்தொழிலாக வரித்துக் கொண்ட ஹிண்டு ராமினை அழைத்து விழா நடாத்திய இவர்கள் பாரிசில் தமது ஏஜென்டுகளை வைத்து முயற்சித்துள்ளனர்.
இதன் தொடர்ச்சியாகவே.....
அமிர் அண்ணாவிற்குக் கண்ணீர் விட பாரிஸ் ஏஜென்டுகளான புஸ்பராசா, ஈழநாடு குகநாதன், ஒவ்ரா உமாகாந்தன், தேத்தண்ணிக்கடை ஞானி போன்ற கயவாளிகள் ஒன்று திரண்டு உங்கள் முன்வந்துள்ளனர்.
தோழர் நாபா (பத்மநாபா) போன்றவர்களிற்கு விழா எடுப்பதிலும் பார்க்க அமிர்தலிங்கத்திற்கு விழா எடுப்பது லாபமானது. ஏனெனில் கூட்டணி பற்றிய மயக்கத்தினை பாவித்து மக்களிடம் சலசலப்பை ஏற்படுத்தலாம்.
கூர்மையாகப் பார்த்தால் கொழும்பு இந்தியத்தூதுவரின் அறிக்கைகள், ஆனந்தசங்கரியின் குத்துக்கரணம் எல்லாமே இந்த ஏற்பாடுகளுடன் தொடர்புடையது. தமது கைவசம் உள்ள கூலிக் குழுக்களில் மக்களிடம் செல்லக் கூடிய ஒரளவு சக்தியுள்ளது என கூட்டணியை அயல்நாடு நம்புகின்றது. அல்லது Raw நம்புகின்றது.
இதனால்தான் அமிர் அண்ணாவிற்குக் கண்ணீர் விடுமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என தேத்தண்ணிக் கடை வதனிமகால் குறாப் கிசுகிசுக்கின்றது.

இந்த ஏற்பாட்டளர்களின் பின்னணி என்ன?

புஸ்பராசா
ஈபிஆர்எல்எப்பின் வரதர் அணியின் ஐரோப்பிய ஏஜன்ட். நீண்டகாலமாக பாரிசில் வசிக்கும் அவன் தமிழீழ எழுச்சியினை எதிர்த்தும், புலிகளை எதிர்த்தும் ஐரோப்பாவில் எங்கு எது இடம்பெற்றாலும் அங்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முகமூடியடன் நிற்பான். இலக்கிய வட்டம் என்கின்ற பெயரில் ஐரோப்பா எங்கும் நடைபெறும் அரசியல் சந்திப்புக்களின் ஊடாக புலி எதிர்ப்பை முன்னெடுப்பதில் இந்தக் கயவனின் பங்கு உள்ளது. அதேபோன்று தலித் இலக்கியம் என்கின்ற பெயரில் தமிழ் சமூகத்தின் மத்தியில் சாதிய முரண்பாடுகளினை முன்னிலைப்படுத்தும் விழாக்கள், சம்வங்களில் இவன் நிற்பான். இப்போது அய்யா அமிரிற்குக் கண்ணீர் வடித்து மங்கையற்கரசிக்கு குடை பிடிக்க முன்வந்துள்ளான். லாசப்பேல் அறிவாலயம் எனும் புத்தகக் கடையின் முதலாளி இவன். அங்கு பின்புறமாக உள்ள கவுண்டரில் தமிழீழ எழுச்சிக்கு எதிரான பிரசுரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். வரதர் தமிழீழம் அமைத்தால் தான்தான் வணிக அமைச்சர் என மார்தட்டியதாக வதனிமகால் வட்டாரங்களள் கூறுகின்றன.

www.tamilarangam.net

**உமாகாந்தன்.**
ஒவ்ரா (அகதி விண்ணப்ப பத்திரம்) எழுதுவது உட்பட பல உபதொழில்களைக் கொண்டுள்ள இவன் நிறைகுடிகாரன். புலிகளிறகு எதிரான விதத்தில் ஒவ்ராவிற்கான மனுவைத் தயாரித்து அனுப்புவதில் மன்னன்.
அவனிடம் ஒவ்ரா எழுதப் போனால், கடைசி நிமிடத்தில் தான் அவன் மனுவை பிரஞ்சில் கொடுப்பான். அதில் என்ன எழுதியிருக்கின்றது என்பதை மனுத்தாரர் அறிய விடாது ஒவ்ராவிற்கு அனுப்பி தனது புலி எதிர்ப்பு வக்கிரத்தை தணித்துக் கொள்ளும் மனவியாதிக்காரன் அவன்.
வரதராசாப் பெருமாளின் அடியாளான இவனின் வக்கிரம் தாங்காமல் மனைவி தப்பிஓடியது தனிக்கதை.

தேத்தண்ணிக்கடை முதலாளி ஞானி

இவனது வதனிமாகலே (marcadet poissonniers) இந்த கயவர்கள் பியர் குடிப்பதற்கும், ஒவ்ராவிற்கு ஆட்கள் பிடிப்பதற்குமான இடம். பாரிசில் எந்த புலி எதிர்ப்பு, தமிழீழ எதிர்ப்பு நிகழ்வு இடம்பெற்றாலும் அதற்கான நிதி உதவியும், விளம்பர உதவியும் இந்த முதலாளி மூலம் பெறலாம். ஈழநாடு குகநாதனின் வாலாக இருந்து மோசடியில் ஈடுபட்டவர் என்கின்றபெருமையும் சுடுதலாக உள்ளது.
தன் சுயபுராணத்தின் மீது பிடிப்புக் கொண்ட இந்த கயவன் மார்கடற் பொசிசன் பகுதியை தமது கொல்லைப்புறமாக்க முயலும் வேடிக்கையான கதைகளும் உள்ளது.

குகநாதன்

அமிர்தலிங்கத்திற்கு கண்ணீர் வடித்து சிறப்புரை வழங்கிய இந்த தவக்கை மோசடியும், நயவஞ்சகமும், கயமைத்தனமும் நிறைந்தது. இவரது தமயனார் ஈரோசினால் காட்டிக் கொடுப்பவனாக இனங்காணப்பட்டுக் கொல்லப்பட்டது பின்னணித்தகவல்.
ஈழநாடு, தமிழ்அலை, ரிஆர்ரி என்கின்ற பல சந்தேகத்திற்குரிய ஊடகங்களின் உரிமையாளனான இவன் நீண்டகாலமாகப் தன்னைப் புலி ஆதரவாளனாகவே வெளியே காட்டி வந்தான். பாரிசில் உள்ள பலரிடம் பணத்தை உறுஞ்சி நடுவீதியில் விட்ட இவன் தற்போது தனது உண்மை எஜமானர்களின் உத்தரவிற்கு அமைய பகிரங்கமாக புலி எதிர்ப்புப் பரப்புரையில் தன்னை இணைத்துள்ளான்.
எதுவித கூச்சமும் இல்லாமல் தன்னைத் தலைவனாக தனது ஊடகங்களின் ஊடாக பரப்புரை செய்யும் இந்தக் கயவாளி பற்றிய கூடுதல் விழிப்பு மக்களிற்குத் தேவை.
உங்கள் பணத்தை உங்களிற்குத் தெரியாமலே மோசடி செய்வதில் இவனை மிஞ்ச ஆட்கள் கிடையாது.
மேற்கூறிய நபர்களுடன் சில உதிரிகளும் இணைந்து நடாத்திய அமிர் அண்ணாவிற்கான கண்ணீர் கூத்தே இந்த விழா!.
ஆனந்தசங்கரி கூட்டணியை உடைத்து கைப்பற்றினால் அதன் கொள்கைபரப்புச் செயலாளர் அல்லது செயலாளர் பதவிக்கு வரப் போகும் மங்கையற்கரசி தன்னிடம் உள்ள அனைத்து வித்தைகளையும் புகலிடங்களில் காட்ட முற்படுகின்றார் என இவ்விழாவில் இவர் நிகழ்த்திய நாடகத்தின் மூலம் அறியலாம்.
புலிகளை அழித்துவிட்டால் தமிழீழ விடுதலைப் போரினை அழித்துவிடலாம் என கங்கணம் கட்டி நிற்கும் எதிரி முகாம்களின் எடுபிடிகளான இவர்களின் பசப்பு முகமூடிகளை கிழித்தெறியும் பிரசுரங்கள் தொடர்ந்து வரும்.

தமிழீழ தேசபக்கதர்கள் கழகம்
பிரான்ஸ்
09.06.2002

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்